*7*

# பூரணப்படுத்தும் பலி மற்றும் அதன் மறைகருத்துக்கள்

## [அதிகாரம் 10]

*பாவத்திற்கான பலிகள் காலத்தின் உதயத்திலே இருந்தே செலுத்தப்பட்டு வருகின்றன. ஆதியாகமத்தின்படி மனித வரலாற்றின் மிகத்தொடக்க காலத்திலேயே, தேவனுக்குப் பலிகள் செலுத்தப் படுதல் தொடங்கிற்று. பின்பு மோசேயின் நியாயப்பிரமாணம் பலிகள் செலுத்துதலைக் கேட்டுக் கொண்டது. புறதெய்வ வணக்கத்தவர்கள்கூட பலிசெலுத்தும் முறைமைகளைக் கொண்டிருந்தனர். இது எதற்காக? பலிசெலுத்தப்பட்ட அந்த மிருகங்கள் - பல ஆயிரக்கணக்கான ஆட்டுக் குட்டிகளும் வெள்ளாடுகளும் எருதுகளும் ஆகிய அவை யாவையும் - எவ்வளவு பாவங்களை நீக்கிப்போட்டன? அந்தக் கேள்விக்கு, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் தரப்பட்டுள்ளபடியான பதிலைக் கவனியுங்கள்:*

> *இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்த மாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்திசெய்யமாட்டாதே (எபிரெயர் 10:1-4).*

*எந்த மிருகத்தின் இரத்தத்தினாலும் எந்த ஒரு பாவமும் நீக்கப்படவில்லை! பின்பு மக்கள் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடுவது எவ்வாறு? பாவங்கள் நீக்கிப்போடப் படுவதற்கு, பலியொன்று செலுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாக உள்ளது; ஆனால் அந்த நோக்கத்தை மிருகங்களின் இரத்தம் நிறைவேற்றாது என்றால் வேறு எது அதை நிறைவேற்றும்?*

*அந்தக் கேள்விக்கு எபிரெயர் 10ம் அதிகாரம் பதில் அளிக்கிறது. மிருக பலிகள் பிழையானவைகளாக இருந்தன. மிருக பலிகளால் நிறைவேற்றப்பட முடியாதிருந்ததை நிறைவேற்றிய பூரணமான பலியைப் பற்றி வசனப்பகுதி*

விவரிக்கிறது, பின்பு அது அந்த பூரணமான பலியின் விளைவுகளைப் பற்றிக் கூறுகிறது.

## நமது பூரணமான பலியாகிய கிறிஸ்து

எபிரெயர் 10:1-18ல் நாம், பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையிலான மிகமுக்கியமான வேறுபாட்டைக் காணுகிறோம். (வசனப்பகுதியை வாசிக்கவும்.) புதிய உடன்படிக்கையின் மேன்மையான பிரமாணங்களிலோ அல்லது பழைய உடன்படிக்கையைவிட புதிய உடன்படிக்கையில் உள்ள மேன்மையான ஒழுக்கங்களிலோ பிரதான வேறுபாடு இருப்பதில்லை. பழைய ஏற்பாட்டுடன் ஒப்பிடுகையில் புதிய ஏற்பாட்டில் தேவனைப் பற்றிக் காணப்படும் அதிகம் கிருபையுள்ள சித்தரிப்பிலும் இந்த வேறுபாடு இருப்பதில்லை. மாறாக இது, பின்வரும் ஒரே எளிய உண்மையில் காணப்படுகிறது: *பழைய உடன்படிக்கை, பாவங்களை நீக்கிப்போட இயலாததாக இருந்தது; புதிய உடன்படிக்கை - கிறிஸ்துவின் பூரணமான பலியின் மூலமாக - பாவங்களை நீக்கிப்போட முடிகிறது, அவ்வாறே அது செய்கிறது.* பின்வரும் கருத்துக்களைப் பற்றி ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள்:

*மிருகபலிகள் பாவங்களை நீக்கிப்போட இயலாதவைகளாக இருந்தன, ஆனால் கிறிஸ்துவின் பலி அதைச் செய்ய முடிந்தது* (10:1-4). மிருகபலிகள் பாவங்களை நீக்கப் போதுமானவைகளாக இருந்திருந்தால், அவைகள் செலுத்தப்படுவது நிறுத்தப் பட்டிருக்கும். அவைகள் நிறைவேற்றிய நன்மை என்ன? 10:1-4ன்படி, அவைகள் பாவங்களை நினைவூட்டுபவையாகவே இருந்தன. (நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்ட காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் பாவங்கள் “முன்னதாக உருளவிடப் பட்டிருந்தன” என்று இவ்வசனப் பகுதி போதிப்பதில்லை. மிருகபலி “பாவங்களை முன்னதாக உருளச்” செய்யக் கூடியதாக இருந்தது என்று கூறுதலானது, அந்த பலிகளுக்கு வேதவசனங்கள் உரித்தாக்குவதை விட அதிகமான வல்லமையை உரித்தாக்குவதாக உள்ளது.[1])

*நியாயப்பிரமாணத்தின் பலிமுறைமையைக் கிறிஸ்து நீக்கிப்போட்டார்.* சங்கீதம் 40ல் இருந்து வருகிற ஒரு மேற்கோள் இந்தக் கருத்தை நிரூபிக்க உதவுகிறது. பலிகளை (மற்றும் நியாயப்பிரமாணத்தை) கிறிஸ்து நீக்கிப்போட்டு “உயிலை” - அதாவது, புதிய ஏற்பாட்டை அல்லது புதிய உடன்படிக்கையை நிலைநாட்டினார் (10:9). இந்த உடன்படிக்கையை நிலைநாட்டுவதில் அவரது வெற்றி என்பது நாம் பரிசுத்தமாக்கப்பட முடியும் என்று அர்த்தப்படுகிறது (10:10).

*ஒரே ஒரு பலியைக் கொண்டு இந்த விஷயங்களைக் கிறிஸ்து நிறைவேற்றினார்* (10:11-14). 14ம் வசனம் இரண்டு கருத்துக்களை வலியுறுத்துகிறது. முதலாவது, கிறிஸ்து ஒரே ஒரு பலியைச் செலுத்தினார் (இது நியாயப்பிரமாணத்தின் கீழ் செலுத்தப்பட்ட பல பலிகளுக்கு நேர்மாறானதாக உள்ளது). இரண்டாவது, அந்த பலிசெலுத்துதலில் இருந்து பயன் அடைந்தவர்கள் அவர்கள் பாவிகளாக இருந்தனர் என்று ஆண்டுக்குப் பின் ஆண்டாக வெறுமனே நினைவூட்டப்பட்டுக் கொண்டிராமல், “எல்லாக் காலத்திற்கும் பூரணப்படுத்தப்” பட்டிருந்தனர். நியாயப்பிரமாணம் செய்ய முடியாதிருந்ததை, கிறிஸ்துவின் பலி - செய்தது: மிருகபலிகள் “ஒருக்காலும் பூரணமாக்குவதில்லை” (10:1), ஆனால் கிறிஸ்துவின்

இரத்தம் அதைச் செய்ய முடிகிறது.

*நமது பாவங்களுக்கு மன்னிப்பு என்பதே அவரது பூரணமான பலியினால் நமக்கு ஏற்படும் விளைவாக உள்ளது.* நேரெதிரான பலிகள் பற்றிய கலந்துரையாடல் 17 மற்றும் 18 ஆகிய வசனங்களில் உச்சநிலையை அடைகிறது: ''அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார். இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே.'' மன்னிப்பு என்பதே பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான மிகவும் உயிர்த்துடிப்புள்ள வேறுபாடாக இருக்கிறது. பூரணமான பலியின் விளைவான இந்த மன்னிப்பு, பலிகள் திரும்பத் திரும்பச், செலுத்தப்படுவதைத் தேவையற்றதாக ஆக்குகிறது. அந்த உண்மை நமக்கு ஒரு கேள்வியைக் கொண்டுவருகிறது: நமது வாழ்வில் இந்தப் பூரணமான பலி அர்த்தப்படுத்த வேண்டியது என்ன?

## பூரணமான அந்தப் பலியினால் நமக்கு உண்டான மறைமுகக் கருத்துக்கள்

பூரணமான பலியினால் சுத்திகரிக்கப்படுதலானது நமக்கு ஆசீர்வாதங்களையும் பொறுப்புகளையும் கொண்டு வருகிறது.

### நமது ஆசீர்வாதங்கள்

ஆசீர்வாதங்கள் யாவை? (எபிரெயர் 10:19-21ஐ வாசிக்கவும்.) அவைகள் "பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவினுடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிற"து (10:19, 20) என்பதும், "தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறார்" (10:21) என்பதும் ஆகும். இந்த ஆசீர்வாதங்கள் ஒவ்வொன்றும் "படியால் ..." அல்லது "படியினாலும்'' என்ற வார்த்தையைக் கொண்டு முடிவதைக் கவனியுங்கள். பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க நமக்கு மார்க்கம் உண்டாகியுள்ளது என்றும் கிறிஸ்துவை நமது பிரதான ஆசாரியராகக் கொண்டுள்ளோம் என்றும் அறிதல் எவ்வளவு ஆச்சரியமானதாக உள்ளது!

### நமது பொறுப்புகள்

நமது பொறுப்புகள் யாவை? அவற்றை நாம் எபிரெயர் 10:22-25ல் காணுகிறோம். இந்த வசனப்பகுதியில் மூன்று பொறுப்புகள் பட்டியல் இடப்பட்டுள்ளன, அவை ஒவ்வொன்றின் நிறைவுப் பகுதியிலும் "கடவோம் ..." என்ற வார்த்தை வருகிறது.

*''சேரக்கடவோம்''* (10:22). இப்போது நாம் ''உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும்'' தேவனிடத்தில் கிட்டிச் சேர வேண்டும் (மற்றும் இன்னும் கிட்டுச் சேருதலைக் காத்துக்கொள்ள வேண்டும்). மற்றும் கடந்தகாலத்தில் நாம், ''துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும்'' ஆக்கப்பட்டிருந்தோம் (வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் மனந்திரும்பினோம் மற்றும் ஞானஸ்நானம் பெற்றோம்) என்ற காரணத்தினால், இன்றைய நாட்களில் நாம் அவரைக்

கிட்டிச்சேரும் உரிமை கொண்டிருக்கிறோம். பிந்திய இந்த இரு நிபந்தனைகளும் முற்றுவினைச்சொல்லில் உள்ளன; இவைகள் கடந்தகால செயல்பாட்டைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன, இவற்றின் விளைவுகள் நிகழ்காலத்தில் இன்னும் உணரப்படுபவைகளாக உள்ளன. கடந்தகாலத்தில் நாம் மனந்திரும்பினோம் மற்றும் ஞானஸ்நானம் பெற்றோம், மற்றும் அது நாம் இப்போது தொடர்ந்து கிட்டிச் சேரமுடியும் என்று அர்த்தப்படுத்துகிறது. நாம் தொடர்ந்து தேவனைக் கிட்டிச்சேருபவர்களாக இருப்பது அவசியமாக உள்ளது!

*"அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்"* (10:23). எழுத்தாளர் தமது வாசகர்களை, "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்" என்று வேண்டிக்கேட்டுக் கொண்டார். இந்த நிருபம் யாருக்கு எழுதப்பட்டதோ, அந்த சகோதரர்கள் அலைபாய்ந்து கொண்டிருந்தனர் என்பதே அவர்களிடத்தில் இருந்த பிரச்சனையாகும்; அவர்கள் உறுதியாய்ப் பற்றிக்கொள்ளாது போகும் அபாயத்தில் இருந்தனர்! அது இன்றைய நாட்களிலும் சிலரது பிரச்சனையாக உள்ளது. நமக்கும்கூட இந்தச் செய்தி தேவைப்படுகிறது: கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தை விடாது பற்றிக்கொள்ளுங்கள்!

*"ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்"* (10:24, 25).[2] நாம் என்ன செய்யும்படி நம்மை இவ்வசனப்பகுதி அழைக்கிறது? (1) நாம், "ஒருவர் மற்றவரைத் தூண்டுவது *எவ்வாறு என்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் ...*" மற்றவர்கள் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி இருப்பதற்கு மிகச்சிறந்த வழியைக் கண்டறிய நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டும். (2) நாம் "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி *ஒருவரையொருவர் கவனிக்க" வேண்டும்.* "ஏவப்படும்படி" ("தூண்டப்படும்படி"; KJV) என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தை, வழக்கமாக எதிர்மறைக் கருத்தில் பயன்படுத்தப் படுகிறது, ஆனால் இவ்விடத்தில் அது ஒரு நல்ல கருத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்வதற்கு, நாம் ஒருவர் மற்றவரைத் தூண்டுபவர்களாகவும் முன்தள்ளுபவர்களாகவும் இருக்க வேண்டும். (3) நாம் *"அன்புக்கும் நற்கிரியைகளுக்கும்"* ஒருவர் மற்றவரை ஏவ [தூண்ட] வேண்டும். தேவனுடைய மக்கள் அன்பு காட்டும்படி "ஒருவரை ஒருவர் தூண்டுதலைக் கவனிக்க" வேண்டும் என்று நமக்குக் கூறப்படுதல் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது! அன்புக்கு மற்றவர்களை "ஏவுதல்" என்பது அனேகமாக, அவர்கள் தேவன்மீதும் ஒருவர் மற்றவர்மீதும் கொண்டுள்ள அன்பைக் காண்பிக்கும்படி அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்வதாக இருக்கலாம்.

இந்தப் பணிப்பொறுப்புகளை நாம் எவ்வாறு நிறைவேற்ற முடியும்? நாம் கூடிவருதலால், ஒருவர் மற்றவரை அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் "ஏவுகிறோம்." கூடிவருதலை நாம் புறக்கணிக்கக் கூடாது, ஆனால் அதற்குப் பதிலாக நாம் ஒருவர் மற்றவரை ஊக்குவிக்க வேண்டும். நாம் ஒன்றுகூடி வருதல் என்பது ஊக்குவித்தலுக்கான முதன்மை வழியாக உள்ளது. சபைகூடிவரும்போது, ஒவ்வொரு நபரும் வந்திருத்தல் அல்லது வராதிருத்தல் என்பதில் இருந்து ஊக்குவித்தல் அல்லது ஊக்கம் இழக்கச் செய்தல் விளைகிறது.

நாம் ஒருவர் மற்றவரை ஊக்குவிக்க வேண்டியது ஏன்? ஏனென்றால் நாளானது "நெருங்குகிறது!" "நாள்" என்பது அனேகமாக நியாயத்தீர்ப்பு நாளைக்

குறிக்கலாம். அந்த வேளை எப்போதுமே நெருங்குகிறதாக உள்ளது; அது முதலாம் நூற்றாண்டில் உடனடியாக வருவதாயிருந்தது, மற்றும் அது இன்றைய நாட்களில் இன்னும் அதிகமாக உடனடியாக வருவதாயிருக்கிறது.

*இந்தப் பொறுப்புகள் நிறைவேற்ற நாம் கொண்டுள்ள ஏவுதல் அல்லது ஊக்குவித்தல் என்ன?* மேற்கூறப்பட்ட ஆசீர்வாதங்களே, நமது கிறிஸ்தவக் கடமைகளை நாம் நிறைவேற்றுவதற்குத் தேவையான ஊக்குவித்தலை நமக்குத்தரவேண்டும். இருப்பினும், மற்ற ஊக்குவித்தலும் தரப்பட்டுள்ளது. இந்த நிருபத்தின் முந்திய பகுதியொன்றில் நாம் கண்டுள்ளபடி (காண்க எபிரெயர் 6), பலன் - மற்றும் தண்டனை அணுகுமுறை பயன்படுத்தப் படுகிறது.

(1) *கீழ்ப்படியாமையின் விளைவுகள்* (10:26-31). இந்த நிருபத்தின் வாசகர்கள், கீழ்ப்படியாமையின் விளைவுகளைப் பற்றிப் பேசுவதன் மூலம் ஒருவர் மற்றவரை ஊக்குவிக்கும்படி அவர்களை ஏவவேண்டும் என்று எழுத்தாளர் நாடினார். 26 முதல் 31 வரையுள்ள வசனங்கள், பழைய ஏற்பாட்டுப் பலிமுறைமையை நமக்கு நினைவூட்டுகின்றன, அதில் "பலத்த கையுடன்" செய்யப்பட்ட பாவங்களுக்கு அதாவது, தேவனுக்கெதிராக கலகம் செய்து அல்லது அவரை எதிர்த்து வெளிப்படையாகச் செய்யப்படும் பாவங்களுக்கு பலிகள் செலுத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் எதுவும் இருந்ததில்லை (காண்க யாத்திராகமம் 14:8; எண்ணாகமம் 33:3); இதே விஷயம் புதிய முறைமையிலும் உண்மையானதாக உள்ளது என்பதே மறைமுகக் கருத்தாக உள்ளது. இங்கு நாம், இன்றைய நாட்களில் மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டிருக்கும் மேன்மையான முறைபற்றிய பின்விளைவு உண்மையைக் கண்டறிகிறோம்: நமது முறைமையின் கேட்டுக்கொள்ளுதல்களை நாம் புறக்கணித்தால் அல்லது கைவிட்டால் அல்லது கீழ்ப்படியாமல் போனால், பழைய முறைமையின் கீழ் மக்கள் பெற்ற மிகமோசமான தண்டனையைப் பெற நாம் தகுதியானவர்கள் ஆகிறோம்.

(2) *கீழ்ப்படிதலுக்கு பலன் கிடைக்கும் என்ற வாக்குத்தத்தம்* (10:32-39). வாசகர்கள் கிறிஸ்தவத்தில் ஏற்கனவே முதலீடு செய்திருந்த காலத்தையும் முயற்சியையும் வீணாக்க வேண்டாம் (10:32-34), ஆனால் வாக்குத்தத்தங்களையும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் கிடைக்கும் பலன்களையும் நினைவில் வைத்துக் கொண்டு (10:35) விசுவாசமுள்ளவர்களாகத் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் (10:36-39) என்று ஊக்குவிக்கப் பட்டனர்.

## முடிவுரை

கிறிஸ்துவின் பூரணமான பலி நம் ஒவ்வொருவருக்குமானதாக இருந்தது. ஆசீர்வாதங்களை நாம் எடுத்துக்கொண்டால், அவை நமக்குரியவையாகின்றன: நாம் மன்னிப்பு, பரிசுத்தஸ்தலத்திற்குள்ச் செல்லும் மார்க்கம் மற்றும் நமது பிரதான ஆசாரியராக கிறிஸ்துவைக் கொண்டிருத்தல் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இருப்பினும், நிறைவான பலனை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு நாம், தேவனிடத்தில் தொடர்ந்து கிட்டிச் சேர வேண்டும், கிறிஸ்துவுக்குள் நமது, கீழ்ப்படிதலான விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும் மற்றும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஒருவர் மற்றவரை ஊக்குவிக்க வேண்டும். விசேஷமாக நாம், விசுவாசத்துடன் ஒன்றுகூடி வருதல் மூலமாக இதைச் செய்ய முடியும்.

*தேவனுடைய திட்டத்திற்குக் கீழ்ப்படியத் தவறி இருக்கிறீர்களா? அப்படியென்றால், முன்னெதிர் நோக்குவதற்குப் பயம் நிறைந்த சில விஷயங்கள் உள்ளன. நாம் யாவருமே தேவனுடைய அன்பின் கரங்களில் பாதுகாப்பாக மூடப்பட்டிருத்தலையே விரும்புகிறோம். இருப்பினும் நீங்கள் அவிசுவாசமானவராக இருந்தால், நீங்கள் தேவனுடைய கோபம் நிறைந்த கரங்களுக்குக் கீழாகும் அபாயத்தில் இருக்கிறீர்கள். "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (10:31).*

---

*குறிப்புகள்*

*[1]நியாயப்பிரமாணத்தின் கீழ் பாவங்கள் "நிவர்த்தி செய்யப்படவில்லை" மற்றும் மிருகபலிகள் பாவங்களை நீக்கிப்போட இயலாது என்றால் (10:4), நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்திருந்த மக்கள் இரட்சிக்கப்படக் கூடுவது எவ்வாறு? அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்படுகின்றனர் என்பதே இதற்குப் பதிலாக உள்ளது! அதாவது அவர் மரிப்பதற்கு முன்பு செய்யப்பட்ட பாவங்களையும் அவர் மரித்ததற்குப் பின்பு செய்யப்பட்ட பாவங்களையும் நீக்கிபோடுவதற்கு அந்த இரத்தம் பின்னோக்கியும் முன்னோக்கியும் பாய்ந்தது. கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப் படுவதற்கு, அவருக்கு முன்பு வாழ்ந்தவர்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக வாழ்ந்திருக்க வேண்டும், மற்றும் இன்றைய நாட்களில் மக்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். [2]இந்தப் புத்தகத்தின் முந்திய பகுதியில் காணப்படும், "எபிரெயர் 10:25ன் மீது ஒரு நெருங்கிய பார்வை" என்ற பாடத்தைக் காணவும்.*